දුරකථන/தொலைபேசி இல/Telephone Nos.
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary: 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk
ඔබේ අංකය / உமது இல. / Your No. ........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය" බත්තරමුල්ල.
"இசுருபாயா" பத்தரமுல்ல.
"Isurupaya" Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No.: ED/9/102/29

දිනය / திகதி / Date: 2016.10.26

சுற்றறிக்கை இலக்கம் 27/2016

மாகான பிரதம செயலாளர்கள் அனைவருக்கும்,

மாகாண கல்விச் செயலாளர்கள் அனைவருக்கும்,

மாகாண கல்விப் பணிப்பாளர்கள் அனைவருக்கும்,

வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அனைவருக்கும்,

கல்வியியல் கல்லூரி பீடாதிபதிகள் அனைவருக்கும்,

கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் அனைவருக்கும்;

பிரிவேனாதிபதிகள் மற்றும் அதிபர்கள் அனைவருக்கும்,

**சுற்றாடல் சிறுவர் கழக நிகழ்ச்சித்திட்டத்தையும் சுற்றாடல்முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தையும் பாடசாலை முறைமைக்குள் பலம்பொருந்தியதாக நடைமுறைப்படுத்துதல்**

பாடசாலை முறைமைக்குள் சுற்றாடல்முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் சம்பந்தமாக வெளியிடப்பட்ட எனது 2003/37 மற்றும் 2008/11 ஆம் இலக்கங்களைக்கொண்ட சுற்றிக்கை அறிவுறுத்தல்கள் 2016.10.26 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரத்தக்கதாக இரத்துச் செய்யப்படுவதோடு அதற்குப் பதிலாக பின்வரும் அறிவுறுத்தல்கள் வெளியிடப்படுகின்றன.

கல்வி அமைச்சின் பூரணமான இணக்கத்துடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வழிகாட்டலின் கீழ் ஆரம்ப மட்டத்தைச் சேர்ந்த மாணவர்களை (முதலாந் தரத்திலிருந்து ஐந்தாம் தரம் வரை) இலக்காகக்கொண்டு நடைமுறைப்படுத்துகின்ற சுற்றாடல் சிறுவர் கழக நிகழ்ச்சித்திட்டமும் இரண்டாம்நிலை மட்டத்தைச்சேர்ந்த மாணவர்களை (ஆறாந் தரத்தில் இருந்து பதின்மூன்றாந் தரம் வரை) இலக்காகக்கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகின்ற சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டமும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கு தூண்டுதளிக்கின்ற நிகழ்ச்சித்திட்டங்களாக அமைவதால் அனைத்துப் பாடசாலைகளிலும் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

அதிபர்களின் தலைமையில் ஆசிரியர்களின் நெறிப்படுத்தலின்கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மேற்படி இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மத்தியில் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்திற்கு பதக்கச் செயற்பாடு, சுற்றாடல் முகாம்கள், சுற்றாடல் விடயத்துறை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், பாடசாலை சுற்றாடல் கருத்திட்டங்கள், சுற்றாடலுடன் தொடர்புடைய கலாசார நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முற்றாய்வுகள் போன்ற பல்வேறு செயற்பாடுகள் அடங்குகின்றன.

அத்துடன் இயற்கைச் சூழல் பற்றிய கூருணர்வினையும் சுற்றாடல்சார்ந்த இரசனையையும் உருவாக்குவதற்காக சுற்றாடல்சார்ந்த பல்வேறு செயற்பாடுகள் சுற்றாடல் சிறுவர் கழக நிகழ்ச்சித்திட்டத்தில் அடக்கப்பட்டுள்ளன.

நிகழ்காலத்தில் சுற்றாடல் பேணல் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுவதால் பாடசாலை முறைமைக்குள் சுற்றாடல் சிறுவர் கழக நிகழ்ச்சித்திட்டத்தையும் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தையும் உயிர்த்துடிப்புமிக்கதாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு கல்வி அமைச்சின் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்நோக்கங்களை ஈடேற்றுவதற்காக கீழே குறிப்பிட்ட அறிவுறுத்தல்கள் தொடர்பில் தங்களின் கவனத்தை ஈர்க்கச்செய்விக்கிறேன். இந்த அறிவுறுத்தல்களை நன்கு ஆராய்ந்து இந்நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கிறேன்.

1. **பாடசாலை சுற்றாடல் சிறுவர் கழகக் குழுக்களை நியமித்தல்**

   சுற்றாடல் சிறுவர் கழகக் குழுக்கள் கீழே குறிப்பிடப்பட்ட அங்கத்தவர்களை உள்ளடக்குதல் வேண்டும்.

   - ஆரம்பப் பிரிவின் அதிபர்/ பிரிவுப் பொறுப்பாசிரியர்
   - முனைப்பாக பங்கேற்கக்கூடிய இரண்டு ஆசிரியர்கள்
   - ஒரு தரத்திலிருந்து ஒருவர் வீதம் ஐந்து தரங்களையும் பிரதிநிதித்துவம் செய்யத்தக்கதாக பெற்றோர்கள் ஐவர்

2. **சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்திற்கான பொறுப்பாசிரியர்களை நியமித்தல்**

   சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்திற்கான பொறுப்பாசிரியர்களை தெரிவுசெய்கையில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்ற, சுற்றாடலை நேசிக்கின்ற மற்றும் வெளிவாரிச் செயற்பாடுகளில் பங்கேற்கக்கூடிய இரண்டு ஆசிரியர்கள் அதிபரால் நியமிக்கப்படல் வேண்டும். அவ்வாறு நியமித்த ஆசிரியர்கள் பற்றி வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண/ மாவட்ட அலுவலகத்திற்கும் அறிவித்தல் வேண்டும்.

   இந்த ஆசிரியர்களால் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் நெறிப்படுத்தப்படல் வேண்டுமென்பதோடு பொருத்தமான மாணவ மாணவியர் முன்னோடிகளாக தெரிவுசெய்யப்படுவதன் மூலமாக இந்த நிகழ்ச்சிட்டத்தை இடையறாமல் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

3. **மாணவர்களைத் தெரிவுசெய்தல்**

   3.1 சுற்றாடல் சிறுவர் கழக நிகழ்ச்சித்திட்டம் ஆண்டுதோறும் முதலாந் தரத்தில் ஆரம்பமாவதோடு சுற்றாடலை நேசிக்கின்ற வெளிவாரிச் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுகின்ற பொருத்தமான அணியைத் தெரிவுசெய்தல் வேண்டும். இந்த நிகழ்ச்சித்திட்டம் முதலாந் தரத்தில் இருந்து ஐந்தாம் தரம் வரையான அனைத்து தரங்களிலும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

3.2 சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் ஆண்டுதோறும் ஆறாந் தரத்தில் ஆரம்பிக்கப்பட்டு மாணவர் அணிகள் பேணிவரப்படல் வேண்டும். அதற்கிணங்க இந்த நிகழ்ச்சித்திட்டம் ஆறாந் தரத்தில் இருந்து பதின்மூன்றாம் தரம் வரையான அனைத்து தரங்களிலும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

## 4. சுற்றாடல் சிறுவர் கழகங்கள் மற்றும் சுற்றாடல் முன்னோடி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் ஆசிரியர்களை பங்கேற்கச் செய்வித்தல்

4.1 ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்

சுற்றாடல் சிறுவர் கழகங்கள் மற்றும் சுற்றாடல் முன்னோடி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் தற்போது ஆண்டுதோறும் மாவட்ட மட்டத்தில் நடத்தப்படுவதோடு இதற்காக அதிபரால் பெயர் குறிக்கப்பட்ட சுற்றாடல் சிறுவர் கழகங்கள் மற்றும் சுற்றாடல் முன்னோடி பொறுப்பாசிரியர்கள் பங்கேற்கச் செய்விக்கப்படல் வேண்டும்.

4.2 அணிகளுக்கு பொறுப்பான மாணவர் தலைவர்களுக்கு பயிற்சியளித்தல்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிராந்திய மட்டத்தில் நடத்தப்படுகின்ற சுற்றாடல் முன்னோடி மாணவர் தலைவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் மாணவர்களை பங்கேற்கச் செய்விக்கையில் அதிபரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டுமென்பதோடு அவர்கள் சுற்றாடல் முன்னோடி அணிகளின் பொறுப்பாசிரியர்களுடன் பயிற்சியில் பங்கேற்கவேண்டும்.

4.3 ஆசிரியர்கள்/ ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் கல்வி உத்தியோகத்தர்களுக்காக அமுலாக்கப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் சுற்றாடல் சிறுவர் கழக நிகழ்ச்சித்திட்டத்தையும் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தையும் மிகவும் பலம்பொருந்தியதாக அமுலாக்கத்தக்கவகையில் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 5. மாகாண/ வலய/ கோட்டங்களுக்கான இணைப்பு உத்தியோகத்தர்களை நியமித்தல்

சுற்றாடல் சிறுவர் கழகங்கள் மற்றும் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்களின் மாகாண இணைப்பாக்க நடவடிக்கைகளுக்காக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் வலய இணைப்பாக்கத்திற்காக வலயக் கல்விப் பணிப்பாளரும் கோட்ட இணைப்பாக்க நடவடிக்கைகளுக்காக கோட்டக் கல்விப் பணிப்பாளரும் உத்தியோகபூர்வ ரீதியில் செயலாற்றுதல் வேண்டும். அவ்வுத்தியோகத்தர்கள் நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புடைய இணைப்பாக்க நடவடிக்கைளையும் மதிப்பீடு செய்தல் மற்றும் நடுவர்சபை அங்கத்தவராகவும் செயலாற்றுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் ஏதேனும் காரணத்தின் நிமித்தம் பிறிதொரு பிரதிநிதி பெயர் குறிக்கப்பட்டுள்ள வேளையிலும் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கான உத்தியோகபூர்வ பொறுப்பு மாகாண/ வலய/ கோட்ட கல்விப் பணிப்பாளரால் வகிக்கப்படல் வேண்டும்.

## 6. சுற்றாடல் முன்னோடி மாவட்ட ஆலோசகர்களை நியமித்தல்

ஒவ்வொரு மாவட்டத்திலும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை, மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களைப் போன்றே வலய மற்றும் கோட்ட ஆணையாளர்களையும் பாடசாலைகளையும் இணைப்பாக்கம்செய்து சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தை பயனுறுதிமிக்கதாக நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்குதல் சுற்றாடல் முன்னோடி மாவட்ட ஆலோசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தை பயனுறுதிமிக்கதாக நடைமுறைப்படுத்த அந்தந்த மாவட்டங்களில் ஐந்து வருடங்களுக்கு குறையாத காலப்பகுதியில் வலய/ கோட்ட ஆணையாளர்களென்ற வகையில் முனைப்பாக செயலாற்றுகின்ற ஆசிரியர்கள் மாவட்ட ஆலோசகர்களாக நியமிக்கப்படல் வேண்டும். (ஆலோசகர்களை நியமித்தல் மாகாணக்கல்விப் பணிப்பாளராலும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையாலும் மேற்கொள்ளப்படும்.)

## 7. சுற்றாடல் முன்னோடி வலய மற்றும் கோட்ட ஆணையாளர்களை நியமித்தல்

கல்வி வலயங்கள் மற்றும் கோட்ட அடிப்படையில் சுற்றாடல் சிறுவர் கழகங்கள் மற்றும் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்களை பாடசாலைகளுக்கு அறிமுகஞ் செய்தல், விஸ்தரித்தல் மற்றும் வெற்றிகரமாக அமுலாக்குவதற்காக வலய மற்றும் கோட்ட ஆணையாளர்கள் நியமிக்கப்படுவர். இதன்பொருட்டு இயலுமான எல்லாவேளையிலும் அர்ப்பணிப்புடன் செயலாற்றக்கூடிய ஆசிரிய ஆலோசகர்களை நியமிக்க ஆவனசெய்தல் வேண்டும். ஆசிரிய ஆலோசகரொருவர் இல்லாதவிடத்து அர்ப்பணிப்புடன் செயலாற்றக்கூடிய அணிகளின் பொறுப்பாசிரியரொருவர் ஈடுபடுத்தப்படல் வேண்டும். (வலய மற்றும் கோட்ட ஆணையாளர்களை நியமித்தலானது வலயக் கல்விப் பணிப்பாளருடன் கூட்டாக மத்திய சுற்றாடல்அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.)

## 8. சுற்றாடல் சிறுவர் கழகங்கள் மற்றும் சுற்றாடல் முன்னோடி நிகழச்சித்திட்டத்தின் செயற்பாடுகளுக்காக கடமை லீவுக்கான அங்கீகாரம் வழங்குதல்

8.1 சுற்றாடல் முன்னோடிகளுக்காக நடத்தப்படுகின்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களையும் சுற்றாடல் பதக்கச் செயற்பாட்டின் நடுவர் சபைப் பணிகள் மற்றும் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்களை ஏனைய பாடசாலைகளுக்கு அறிமுகஞ்செய்தலை உள்ளிட்ட செயற்பாடுகளுக்கான அவசியப்பாட்டினை உறுதிசெய்த பின்னர் சுற்றாடல் முன்னோடி மாவட்ட ஆலோசகர்/ சுற்றாடல் முன்னோடி வலய மற்றும் கோட்ட ஆணையாளர்களுக்கு அதிபரின் பரிந்துரை மற்றும் வலய/ கோட்ட கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்தின் பேரில் ஆண்டொன்றுக்கு 12 நாட்கள் கடமை லீவு வழங்கப்படல் வேண்டும்.

8.2 மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஆசிரியர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகையில் அவசியமான சந்தர்ப்பங்களில் கடமை லீவு வழங்கப்படல் வேண்டும்.

8.3 தற்போது முனைப்பான கடமைகளில் ஈடுபட்டுள்ள சுற்றாடல் முன்னோடி மாவட்ட ஆலோசகர்களுக்கும் வலய மற்றும் கோட்ட ஆணையாளர்களுக்கும் சுற்றாடல் சிறுவர் கழகங்கள் மற்றும் சுற்றாடல் முன்னோடி நிகழச்சித்திட்டங்களின் மேற்பார்வைக்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண/ மாவட்ட அலுவலகங்களின் வேண்டுகோளுக்கிணங்க 8.1 இல் குறிப்பிட்ட லீவுகளுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு குறைந்தபட்சம் ஒரு நாள் கடமை லீவு வழங்கப்படல் வேண்டும்.

## 9. சுற்றாடல் முற்றாய்தல் கற்கைப் பணிகளுக்காக சுற்றாடல் முன்னோடிகள் பாடசாலையிலிருந்து வெளியேசெல்லல்

சுற்றாடல் முற்றாய்தல் பணிகளுக்காக சுற்றாடல் முன்னோடிகளை பங்கேற்கச் செய்விக்கையில் சம்பந்தப்பட்ட ஆசிரியரால் அதிபரின் விதப்புரையுடன் வல்யக் கல்விப் பணிப்பாளரின் எழுத்திலான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

## 10. சுற்றாடல் சிறுவர் கழகங்கள் மற்றும் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்களின் ஒழுங்குறுத்தல் குழு

கோட்டம், வலயம் மற்றும் மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற ஒட்டுமொத்த பாடசாலைகளின் மதிப்பீட்டுச் செயற்பாட்டின்போது சுற்றாடல் சிறுவர் கழகங்கள் மற்றும் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் சம்பந்தமாகவும் மதிப்பீடுக்கு இலக்காக்குதல் வேண்டும். மாகாணக் கல்விப் பணிப்பாளரால் ஒவ்வோர் ஆறுமாதங்களுக்கும் ஒரு தடவை சுற்றாடல் சிறுவர் கழக நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்/ சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் கல்வி அமைச்சுக்கு பிரதிகளைக் கொண்டதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண அலுவலகங்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

கீழே குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய மூன்று ஒழுங்குறுத்தல் குழுக்கள் மாகாண, வலய மற்றும் கோட்ட மட்டத்தில் நிறுவப்படல் வேண்டும்.

**01. மாகாணக்குழு**

- மாகாணக் கல்விப் பணிப்பாளர்( மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை)
- மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிநிதியொருவர்
- மாவட்ட ஆலோசகர்கள்

**02. வலயக் குழு**

- வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாவட்ட அலுவலகத்தின் பிரதி/ உதவிப் பணிப்பாளர்
- சுற்றாடல் முன்னோடி வலய ஆணையாளர்கள்

**03. கோட்டக் குழு**

- கோட்டக் கல்விப் பணிப்பாளர்
- சிரேட்ட சுற்றாடல் உத்தியோகத்தர்/ பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்
- சுற்றாடல் முன்னோடி கோட்ட ஆணையாளர்

இந்த குழுக்கள் வருடத்திற்கு இரண்டு தடவைகள் கூடவேண்டுமென்பதோடு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக மாகாண, வலய, கோட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்படலும் வேண்டும்.

11. அரச சார்பற்ற நிறுவனங்கள் சுற்றாடல் முன்னோடி மாணவர்களின் பங்கேற்பினை பெற்றுக்கொள்ளும்போது அதற்காக அதிபர் மூலமாக கல்வி அமைச்சின் / மாகாணக் கல்வி அமைச்சின் முன்னங்கீகாரம் பெறப்படல் வேண்டுமென்பதோடு மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு பிரதியொன்று அனுப்பிவைக்கப்படலும் வேண்டும். அக்கடிதத்தின் பிரதியொன்று கல்வி அமைச்சுக்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண அலுவலகத்திற்கும் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

12. வாரத்திற்கொருதடவை பாடசாலையில் காலைநேரக் கூட்டத்தின்போது சுற்றாடல் கீதம் இசைக்கப்படல் வேண்டும்.

ஒப்பமிட்டது / சுனில் ஹெட்டிஆரச்சி
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள்

01. சனாதிபதி செயலாளர், சனாதிபதி அலுவலகம் - தயவான தகவலுக்காக
02. செயலாளர், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு – தயவான தகவலுக்காக
03. தலைவர், மத்திய சுற்றாடல் அதிகாரசபை – தயவான தகவலுக்காக